https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

07th MAY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 26




எம்பியின் மனைவியை வழிக்குக் கொண்டுவந்த டிலான்

06



பட்ஜட்டின் பின் ஜனாதிபதித் தேர்தல்

07



## இந்த வருடத்துக்குள் 2 தேர்தல்கள்:

# IMF - இந்தியாவிடம் அரசு வாக்குறுதி

இந்த வருட இறுதிக்குள் இரண்டு தேர்தல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் அடுத்து மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று அறிய முடிகிறது.

இந்தத் தேர்தலை நடத்துவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துக்கும்

02

## ஜனாதிபதி ஏமாற்றிவிட்டார்

அமைச்சு ப் பதவிகள் தருவதாகக் கூறி ஜனாதிபதி தங்களை ஏமாற்றிவிட்டார் என்று மொட்டு கட்சியின் சிரேஷ்ட எம்பிக்கள் பலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

10 அமைச்சுப் பதவிகளை அவர்கள் ஏற்கனவே கேட்டிருந்தனர்.இன்று தருகிறேன்,நாளை தருகிறேன் என்று கூறி ஜனாதிபதி பல மாதங்களாக இழுத்தடித்து வருகிறார்.

இதனால் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்துள்ள மொட்டு எம்பிக்கள் இனி அமைச்சுப் பதவிகள் கேட்டு பின்னால் செல்லப்போவதில்லை என்று கூறியுள்ளனர்.

## ஜனாதிபதி நன்றி சொன்னார்

நாடாளுமன்றில் இடம்பெற்ற ஐஆகு உடன்படிக்கை மீதான வாக்கெடுப்பில் அரசுக்கு சாதகமாக வாக்களித்ததால் ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் தனக்கு நன்றி கூறினார் என்று ஏ.எச்.எம்.பௌசி கூறியுள்ளார்.

எனது கட்சி கோபித்தாலும் பரவாயில்லை அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்களுக்கு நான் ஆதரவு வழங்குவேன் என்று அவர் மேலும் கூறினார்.

கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளராக போட்டியிடுவதற்காக

02

## அரசில் இணைவோர்க்கு சஜித் அனுமதி

தற்போதைய அரசியல் நிலவரங்கள்பற்றி கலந்துரையாடுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பிக்கள் கூட்டம் இந்த வாரம் கொழும்பில் கட்சித் தலைவர்

02




## சஜித்துடன் இணையும் 15 மொட்டு கட்சி எம்பிக்கள்:

அவர்கள் நால்வருடன் ரகசிய சந்திப்பு

ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் பலர் அரசுடன் இணைய போகிறார்கள் என்று தொடர்ச்சியாகக் கூறப்பாடலும்கூட மொட்டின் பக்கம் இருந்து 15 பேர்

02



## ரணில் ஜனாதிபதி வேட்பாளர்:

# ஐ.தே.க சீனியர் அமைச்சர்

### பசில்-ரணில் சந்திப்பில் யோசனை முன்வைப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் சில நாட்களுக்கு முன் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அதில் பல விடயங்கள் பற்றி பேசப்பட்டபோதிலும் முக்கியமாக ஜனாதிபதித் தேர்தல் பற்றித்தான் அதிகம் பேசப்பட்டதாக தெரிய வருகிறது.

02




புதுசுடர்
www.puthusudar.lk
2023 MAY 07 - SUNDAY

# வேட்பாளர் போட்டி : ரணிலின் வியூகம்

கிடைக்கவே முடியாது என்றிருந்த-மக்கள் தரமாட்டார்கள் என்றிருந்த பெரும் பதவி -ஜனாதிபதி பதவி கிடைத்துவிட்டது.

எம்பி பதவியைக்கூட அவர்கள் வழங்கவில்லை.அப்படி இருக்கும்போது ஜனாதிபதி பதவியை வழங்குவார்களா?

ஆனால்,நாட்டின் பொருளாதார நிலைமை-முன்னாள் ஜனாதிபதி பார்த்த வேலை ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை மிக இலகுவாகக் கொடுத்துவிட்டது.

அதைத் தக்கவைத்துக்கொள்வது மட்டுமல்ல அடுத்த தடவையும் அந்தப் பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.மக்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் ரணிலின் இப்போதைய இலக்கு.

அதற்காகத்தான் அவர் இப்போது நாய் நகர்த்தி வருகிறார்.

அவர் முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கும் மொட்டு கட்சி அவரைத் தொடர்ந்தும் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கப் போவதில்லை.

ராஜபக்ஸ குடும்பத்துக்கு அப்போது உடனடி பாதுகாப்பொன்று தேவைப்பட்டது. அதை வழங்குவதற்கான சிறந்த மனிதர் ரானில்தான் என்பதை அறிந்தார்கள்.அதனால்தான் உடனடியாக அவரை ஜனாதிபதியாக நியமித்து தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டார்கள்.

இப்போது அவர்களின் பாதுகாப்பு நூறு வீதம் உறுதியாகிவிட்டது.அவர்களால் வீதிக்கு இறங்க முடியும்கூட்டங்களை நடத்த முடியும்மக்களை சந்திக்க முடியும். அப்போதுபோல் இப்போது மக்களின் எதிர்ப்புகள் கிடையாது.

இனிப் பாதுகாப்பு வழங்குபவர் தொடர்ந்தும் தேவைப்படமாட்டார். பாதுகாப்பு பிரச்னை ஏற்பட்டால்தானே பாதுகாப்பு ஊழியர் தேவை.

இதனால் மீண்டும் ராஜபக்ச குடும்பத்தின் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.தொடர்ந்தும் ரணிலில் தங்கி இருக்க முடியாது.மஹிந்தவை அடிப்படையாகக் கொண்டோ அல்லது பசிலை அடிப்படையாகக் கொண்டோ அல்லது நாமலை அடிப்படையாகக் கொண்டோ மொட்டு கட்சியை மீண்டும் பலப்படுத்துவதற்கான தேவை அக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால்தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச குடும்பத்தில் இருந்து ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு அக்கட்சி விரும்புகிறது. அவர்கள் மெல்ல மெல்ல இக்கருத்தை மக்கள் மயப்படுத்தத் தொடங்கியுள்ளதைக் காணலாம்.

மொட்டுக் கட்சியின் வேட்பாளராகத் தானே நிறுத்தப்படுவேன் என்று ரணில் முதலில் நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால்,நிலைமை மாறிவருவதை அவதானிக்கிறார்.

ஆனால்,அந்தக் கட்சிக்குள் தனக்கென்று ஒரு ஆதரவுத் தளத்தை அவர் உருவாக்கியுள்ளார்.ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் அந்தக் கட்சி இரண்டு பிரிவாக நிற்கிறது.

ஒரு பிரிவு ராஜபக்ச குடும்பத்தின் பக்கம்.அடுத்த பிரிவு ரணிலின் பக்கம். ஆனால்,இப்போது இருக்கிறவர்களின் ஆதரவை மாத்திரம் வைத்து தேர்தலில் வெற்றிபெற முடியாது.இன்னும் பலரது ஆதரவு தேவை.அதனால்தான் அவர் ஏனைய கட்சிகளின் எம்பிக்களுக்கு வலை வீசுகிறார்.

ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்குப் போதுமான ஆதரவு மொட்டுக்குள் இருக்கும்போது எதற்காக ஏனைய கட்சிகளுக்கு ரணில் வலை வீசுகிறார் என்ற கேள்வி பலருக்கு எழலாம்.

காரணம் இதுதான்.ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்காக அவர் ஆட் சேர்க்கவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்காகவே ஆட் சேர்கிறார்.

அவரின் பின்னால் ஆட்கள் ஓரளவாவது சேர்வதற்குக் காரணமாக இருப்பது இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஓரளவாவது அவர் தீர்வை முன்வைத்திருப்பதுதான்.

கோத்தாவின் ஆட்சியில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு,அதற்கான வரிசை,மின்வெட்டு போன்றவற்றை முற்றாக நீக்கியுள்ளார்.எரிபொருட்களின் விலைகளை கட்டங்கட்டமாகக் குறைக்கத் தொடங்கியுள்ளார்.சர்வதேச நாணய நிதியத்தின் நிதியைப் பெற்றுள்ளார்.

இந்த உடனடிப் பிரச்சினையை அவர் தீர்த்துள்ளதால் அவர் இருக்கின்ற எல்லா பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார் என்று சிலர் நம்புகிறார்கள். அப்படி நம்புகிறவர்கள் அவர் பின்னால் செல்வதற்குத் தயாராகின்றனர்.

அப்படித் தயாராகுபவர்கள் மொட்டு கட்சியிலும் உள்ளார்கள்.ஐக்கிய மக்கள் சக்தியிலும் உள்ளார்கள். ஜனாதிபதி பதவியில் இருக்கின்ற மிகுதிக் காலத்தில் இன்னும் சில முக்கியமான வேலைகளை செய்து மேலும் பலரை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஆக,இனி மொட்டுக்குள் இருக்கின்ற ராஜபக்ச ஆதரவாளர்களும்-மொட்டுக்குள் இருக்கின்ற ரணில் ஆதரவாளர்களும் முட்டி மோதப்போவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

ரணிலின்தான் மொட்டின் பொது வேட்பாளர் என்று ஒரு தரப்பும் இல்லை ராஜபக்ச குடும்பத்தில் இதுதான் பொது வேட்பாளர் என்று இன்னொரு தரப்பும் இப்போதே சத்தம் போடத் தொடங்கியுள்ளதை நாம் காண்கிறோம்.இந்தச் சத்தம் நாட்கள் செல்ல செல்ல ஓங்கி ஒலிக்கப்போகிறது.

## சஜித்துடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

அவ்வாறு இணையவுள்ள 15 பேரில் நால்வருக்கும் சஜித் பிரேமதாசாவுக்கும் இடையில் ரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு-07இறொஸ்மீட் பிளசில் உள்ள இரு தரப்புக்கும் நன்கு பரிச்சயமான ஒருவரின் இல்லத்தில்தான் அந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

விரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அதனை ஒட்டி அரசுக்குள் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன என்றும் அந்த நால்வரும் சஜித்திடம் கூறியுள்ளனர்.

15 பேரும் நேராக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையப் போகிறீர்களா அல்லது கூட்டணியாக இணையப் போகிறீர்களா என்று 15 பேரும் கூடிப் பேசி ஒரு முடிவை எடுங்கள் என்று சஜித் அவர்களிடம் கூறியுள்ளார்.

ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு இரவு விருந்துடன் நிறைவுபெற்றது. அடுத்த சந்திப்புக்கான திகதியும் இதில் தீர்மானிக்கப்பட்டது.

## அரசில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சஜித் பிரேமதாசாவின் தலைமையில் கூடியது.

அதில் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் அரசு பக்கம் பாய்வதுபற்றியும் பேசப்பட்டது.

அது தொடர்பில் சஜித் அவரது நிலைப்பாட்டை வெளியிட்டார்.

எனது கட்சி எம்பிக்கள் போகமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.அதையும் தாண்டி யாரும் போக விரும்பினால் நான் பிடித்துக்கொண்டு இருக்கமாட்டேன். தாராளமாகப் போகலாம்.கதவு திறந்தே உள்ளது என்றார்.

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனக ரத்நாயக்க

*பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்தநாயக 2024 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.*



*கடந்த காலங்களில் அவர் பேசு பொருளாகத் திகழ்ந்தவர்.*

*மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக மின் வெட்டை நிறுத்துமாறு கூறியும் அவர் மக்கள் பக்கம் நின்று செயற்பட்டார்.*

*இதற்காக அவருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவும் உள்ளது.*

*இந்த நிலையில் . அவர் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.*

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தனது எம்பி பதவியை முஜிபுர் ரஹ்மான் இராஜினாமா செய்ததால் அவரது இடத்துக்கு எம்பியாக நியமிக்கப்பட்ட பௌசி நாடாளுமன்றில் இடம்பெற்ற ஐஆகு உடன்படிக்கை மீதான வாக்கெடுப்பில் அரசுக்கு சாதகமாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

## ரணில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதில் பல யோசனைகளை பசில் முன்வத்தாராம்.அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலையே மொட்டு கட்சியின் வேட்பாளராக நிறுத்துதல், ஐக்கிய தேசிய கட்சியின் சீனியர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குதல் உள்ளிட்ட பல ஆலோசனைகளை பசில் ரணிலிடம் முன்வைத்தார் என்று சொல்லப்படுகிறது.

## IMF...

(முன்பக்கத் தொடர்ச்சி...)


இந்தியாவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாக்குறுதி வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா அவ்வப்போது இலங்கை அரசை வலியறுத்தி வருகிறது.இந்தப் பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவி தொடர்ச்சியாகத் தேவை என்பதால் அந்த நாட்டின் கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலையில் உள்ளது இலங்கை அரசு.

இதனால் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார் என்றும் மஹிந்த ராஜபக்ச நடத்தியதுபோல் துண்டு துண்டாக அந்தத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிய முடிகிறது.

அந்த வகையில்இவடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தலை முதலில் நடத்தும் திட்டம் ரணிலிடம் உள்ளது  என அரச தகவல்கள் கூறுகின்றன.

அதேபோல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி ஐஆகு இற்கு வழங்கியள்ளாராம்.




# அனுரவே ஜனாதிபதிக்குத் தகுதியானவர்



அனுரகுமாரவே ஜனாதிபதிக்குத் தகுதியானவர் என்று ஜேவிபியின் உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கூறினார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்

அனுரகுமாரவே ஜனாதிபதிக்குத் தகுதியானவர் என்று அண்மைக்காலமாக எடுக்கப்பட்ட பல ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியாவதற்கு ஒருபோதும் ரணில் விக்ரமசிங்க தகுதியானவர் அல்ல.அவரை ஜனாதிபதியாக்கியது மக்கள் அல்ல ராஜபக்ச குடும்பம்.அவர்களின் பாதுகாப்புக்காக.

இந்த நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் இந்த நாட்டில் இருந்து கொள்ளையடித்து வெளிநாடுகளில் பணத்தை-சொத்துக்களை பதுக்கி வைத்துள்ளார்கள்.இந்த நிலை இனி மாற வேண்டும்.மக்கள் எம்மிடம் நாட்டின் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும்.

பிழையான பொருளாதார கொள்கையே இன்றும் பின்பற்றப்படுகிறது.அதனால்தான் எமக்கு இந்த நிலைமை.

இலங்கைக்கு சீனா முக்கியமில்லை.சீனாவுக்குத்தான் இலங்கை முக்கியம். நாம் சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது 300மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களைத்தான்.ஆனால்,சீனா இங்கு அனுப்புவது 3000 டொலர் பெறுமதியான பொருட்களை.

சீனாவுக்கு செல்கின்ற கப்பல்களில் 40 வீதமானவை இலங்கை கடல் வழியாகத்தான் செல்கின்றன.

சீனா எதற்காக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வாங்கியது? வர்த்தகம் செய்வதற்காகாகவா? இல்லை.அவர்களின் பாதுகாப்புக்காக. நாம் ஏனைய நாடுகளுடன் பேரம் பேசி வர்த்தகம் செய்யும் அளவுக்கு எமக்கு சக்தி-வளம் இருக்கிறது.ஆனால்,அதை நாம் பாவிப்பதில்லை. இதுதான் எமது பொருளாத கொள்கையில் இருக்கின்ற பிரச்சினை.வரி முறையை முதலில் மாற்ற வேண்டும். புதிய முதலீட்டாளர்களிடம் லஞ்சம் வாங்குவதை நிறுத்த வேண்டும்.எமது ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்காது.பைகளில் பணத்தை எடுத்துக்கொண்டு வந்து லஞ்சம் தருவதற்காக ஹோட்டல்களில் காத்துக்கிடக்க வேண்டியதில்லை.

என்றார்.

# ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில்...



மின் கட்டண அதிகரிப்பால் இன்று ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் கிடக்கின்றன என்று காவிந்த ஜயவர்தன எம்பி கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார பிரச்சினை எழுந்தபோதே நாம் அரசை ஐஆகுயை நாடச் சொன்னோம். 42.1 பில்லியன் கடனை அரசு உள்நாட்டு கடனாகப் பெற்றுள்ளது.இதை மறுசீரமைப்பு செய்வது எப்படியென்று அரசு சொல்லவில்லை.

அரசுக்குள் ஒரு தரப்பு மறுசீரமைப்பை ஆதரிக்கிறது.இன்னொரு தரப்பு எதிர்க்கிறது.நாம் இதில் எந்த நிலைப்பாட்டை அரசின் நிலைப்பாடாக எடுத்துக்கொள்வது?

அரசு வர்த்தகத்தில் ஈடுபடத் தேவையில்லை என்கிறார் ஜனாதிபதி.மஹிந்த சொல்கிறார் அதற்கு முரணாக.

வங்கிக் கட்டமைப்புக்கு ஏதும் பிரச்சினை ஏற்பட்டால் நாட்டின் முழு பொருளாதாரமும் வீழ்ச்சியடையும்.

அதேபோல்,வரிக் கொள்கை தொழிலாளர்கள் தாங்கிக்கொள்ள முடியாத சுமையாக அமைந்துள்ளது.இதனால், கல்விமான்கள்,தொழில் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

மின்கட்டண அதிகரிப்பால்

பாதிக்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான வீடுகள் இன்று மின் துண்டிப்பால் இருளில் மூழ்கிக்கிடக்கின்றன.

ஐஆகு நிதி உதவியால் ரூபாவை அதிகரிக்க முடியும். ஆனால்,டொலரின் எண்ணிக்கையை எப்படி அதிகரிப்பது என்று அரசு சொல்லவில்லை.அதற்கான திட்டம் என்னவென்று அரசு கூற வேண்டும்.

போதுமான அளவு நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்துவிட்டு இப்போது வந்து சொல்கிறார்கள் நாட்டை முன்னேற்றப் போகிறார்கள் என்று.



# இலங்கையின் பல்பரிமாண வறுமைச் சுட்டெண் 2019 முடிவுகள்:

## தேசிய மற்றும் சிறுவர் ஆய்வுகள்

வறுமைக்கு பல அம்சங்கள் இருக்கும் போது, குறிப்பாக ஊட்டச்சத்து மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி போன்ற குழந்தை பருவத்திலுள்ள பற்றாக்குறைகள் பற்றிய அனுபவங்கள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். எனவே நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG 1 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட "எல்லா இடங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதல் " என்ற சர்வதேச சமூகத்தின் அர்ப்பணிப்புக்கு இணங்க, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் உள்ள பற்றாக்குறைபாடுகள் உட்பட பணப் பற்றாக்குறைகளுக்கு அப்பால் தனிநபர்களுக்கான வறுமையை வெளிப்படுத்துகின்ற பல்வேறு வழிகளை இலங்கை அங்கீகரிக்கின்றது.

2021 ஆம் ஆண்டில், பல்வேறு இணைச் செயற்பாட்டாளர்களுடன் நெருக்கமான ஆலோசனையிலும் மற்றும் ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF), ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனித அபிவிருத்தியின் முன்முயற்சி (OPHI) எனும் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடனும், இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (DCS) ஆனது இலங்கைக்கான முதல் அதிகாரப்பூர்வ தேசிய பல்பரிமாண வறுமைச் சுட்டெண்ணை (தேசிய MPI) உருவாக்கியது. இதற்காக குடித்தன வருமானம் மற்றும் செலவு பற்றிய அளவீடு - 2019 இன் தரவுகள் பயன்படுத்தப்பட்டது.

இலங்கையின் பல்பரிமாண வறுமைச் சுட்டெண் (MPI) ஆனது வறுமையின் ஒரு விரிவான முழுமையான காட்சியை உருவாக்குகிறது. ஏழை மக்கள் அனுபவிக்கும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட குறைபாடுகளின் ஒரு தொகுதியில் கவனம் செலுத்துவதன் மூலம் ஏழை மக்கள் யார் மற்றும் அவர்கள் எப்படி ஏழைகள் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

# உணவுப் பாதுகாப்புக்கான புதிய திட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது (FAO) ஐரோப்பிய ஒன்றியத்துடன் (EU)) ஒன்றிணைந்து நெற்பயிர்ச் செய்கைத் துறையின் உற்பத்தித்திறன் மற்றும் நிலைபேண்தன்மையை ஊக்குவிப்பதன் மூலமாக இலங்கையின் உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்து வதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை இன்று ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நான்கு மில்லியன் யூரோ (அண்ணளவாக 1.5 பில்லியன் ரூபாய்கள்) நிதிப்பங்களிப்புடனான இந்த முன்னெடுப்பானது கமத்தொழில் அமைச்சர் கௌரவ மகிந்த அமரவீர, இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் அதிமேதகு டெனிஸ் சாய்பி மற்றும் FAO இன் இலங்கைக்கான பிரதிநிதி விம்லேந்திர ஷரண் ஆகியோரது ஆசியுடன் அம்பாந்தோட்டை படஅத விவசாய தொழில்நுட்ப பூங்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கமத்தொழில் அமைச்சு மற்றும் மகாவலி அதிகாரசபையினால் ஆதரவளிக்கப்பட்டு குயுழு இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற, நிகழ்ச்சித்திட்டமானது சமீபத்திய பொருளாதார நெருக்கடியினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம், குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய ஏழு மாவட்டங்களின் 71,000 சிறு பரிமாண நெற்பயிர்ச் செய்கையாளர்களையும் 1,200 நெல் விதை விவசாயிகளையும் இலக்காக கொண்டுள்ளது.





# விமானங்களால் கிடைத்த ரூ.2 ஆயிரம் கோடிக்கு ஆப்பு

இலங்கைக்கு வந்து போகும் சர்வதேச விமானங்கள் மூலம் இலங்கைக்கு கிடைத்த 2 ஆயிரம் கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது என்று வருடாந்த அரச கணக்காய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

சிவில் விமான சேவை அதிகார சபையால் 10 வருடங்களாக திரட்டப்பட்ட இந்த நிதி அந்த நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்கள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முன்னாள் அமைச்சர்கள்,முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மற்றும் இந்த அதிகார சபையின் அதிகாரிகள் ஆகியோர் துபாய் உள்ளிட்ட நாடுகளில் இடம்பெற்ற விமான கண்காட்சிகளை கண்டுகளிப்பதற்காகவும் கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகார சபையின் அதிகாரிகள் பலர் 10 வருடங்களாக ஆறு,ஏழு தடவைகள் தேவையற்றமுறையில் வெளிநாட்டு பயணங்களை மேகொண்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் 20 வருடங்களாக பதவியில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.இருந்தும்,அவரது பதவிக் காலத்தின் 10 வரிடங்களுக்குள்தான் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

இந்த மோசடி தொடர்பிலும் பணத்தை திறைசேரிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவருக்கு ஒவ்வொரு வருடாந்த கணக்காய்வு அறிக்கையிலும் அறிவுறுத்தியபோதும் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அதில் மேலும் சொல்லப்பட்டுள்ளது.

# ஜூன் மாதம் முதல் எரிபொருள் விலை குறைப்பு:

## QR CODE முறைமையும் நீக்கம்

வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்கள் இரண்டு இலங்கைக்கு வந்துள்ளதால் ஜூன் மாதம் முதல் எரிபொருட்களின் விலை குறைக்கப்படும் என்று மற்றும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு, QR CODE முறைமையையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இரண்டு வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்கள் இலங்கையில் அதன் வர்த்தக நடவடிக்கையைத் தொடங்குவதே இந்த நிலைமைக்குக் காரணம் என்று அமைச்சு தெரிவிக்கிறது.

மொத்தம் நான்கு வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் சந்தையில் குதிக்கின்றன.









# புதிய ஆளுநர்கள் நியமனம்:

## ஐவரின் பெயர்கள் முன்மொழிவு

வடக்கு,கிழக்கு,வயம்ப மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான ஆளுநர்களை விலகுமாறு அரசால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில்,அவர்கள் விலகியதும் புதிய ஆளுநர்கள் நால்வரை நியமிப்பதற்கு ஐவரின் பெயர்கள் இதுவரை முன்மொழியப்பட்டுள்ளன.

அவர்களுள் நால்வர் அரசியல்வாதிகள், ஒருவர் அதிகாரி. நான்கு அரசியல்வாதிகளுள் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த அக்கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபாண்டா முன்னாள் எம்பிக்கள் நவீன் திஸாநாயக்க,தயா கமகே ஆகியோரின் பெயர்களும் உள்ளன.

பிரிட்டன் சென்றிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் புதிய ஆளுநர்களின் நியமனம் இடம்பெறும் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பதவிகளை காப்பாற்றுவதற்காக அரசியல்வாதிகளின் பின்னால் ஓடும் ஆளுநர்கள்

வடக்கு,கிழக்கு வயம்பா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் ஆளுநர்களை உடனடியாக பதவி விலகுமாறு அரசு உத்தரவிட்டுள்ளதால் அவர்கள் அந்தப் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்வதற்காக செல்வாக்குமிக்க அரசியல்வாதிகளின் உதவியை நாடியுள்ளார்கள் அறிய முடிகிறது.

பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி நாட்டுக்கு வருவதற்கு முன் தமது பதவிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டள்ளனர் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆளுநர்களின் செயற்பாடுகள் தொடர்பில் மொட்டு கட்சி எம்பிக்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதியிடம் முறைப்பாடுகளை முன்வைத்து வந்தனர்.

அவர்களுக்கு அரசியல் தெரியாதுஅரசியல்வாதிகளை மதிக்கத் தெரியாது.இராணுவத்தைப்போல் தங்களுடன் கடுமையாக நடந்துகொள்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் முறைப்பாடு செய்தனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற அரச எம்பிக்களின் கூட்டத்தில்கூட ஜனாதிபதியிடம் இதே முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

அதிலும், ஆளுநர்கள் வசந்த கருணாகொட,ரொஷான் குணதிலக ஆகியோர்மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.இவர்களை விலகியே தீர வேண்டும் என்று நின்றனர்.

மொட்டு கட்சிகளின் ஆதரவு தனக்குத் தேவை என்பதால் ஜனாதிபதி அவர்களின் கோரிக்கையை ஏற்று ஆளுநர்களை விலகுமாறு உத்தரவிட்டுள்ளார் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.




# மீண்டும் பதவி நீடிப்பு

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படவுள்ளது என உயர் மாட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மார்ச் 26 முதல் ஜூன் 26 வரை மூன்று மாத பதவி நீட்டிப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜூன் 26இல் இருந்து அடுத்த வருடம்வரை அவரது பதவி காலம் மேலும் நீடிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவியைக் குறிவைத்து சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் சிலர் ஆவலுடன் காத்துக்கிடக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# 200 அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளில் பணிபுரியும் 200 அதிகாரிகளுக்கு எதிராக நாடு பூராகவும் மக்கள் முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

மக்களுக்கான சேவைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொடுப்பதில்லை, உதாசீனம், தரக்குறைவாக நடந்துகொள்ளல் உள்ளிட்ட பல முறைப்பாடுகள் இந்த அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தி குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

# கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் நடத்திய தர்ம சக்தி பூஜை





(நூருல் ஹுதா உமர் )

தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான பொது மாநாடு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் இணைந்து நடத்திய தர்ம சக்தி பூஜை 2023 சகோதரத்துவ வெசாக் விழா வெள்ளிக்கிழமை (05) திருகோணமலை கடற்கரை வளாகத்தில் சிறப்பாக ஆரம்பமானது.

திருகோணமலை ஜயசுமணரம விகாரையில் இருந்து புனித தூபிகள் விசேட வாகன ஊர்வலம் மூலம் கோட்டை சங்கமித்த பௌத்த நிலையத்திற்கு எடுத்து வரப்பட்ட பின்னர் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பௌத்த மத குருக்கள், கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி. எஸ். ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி. எச். என். ஜெயவிக்ரம, மாகாண கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு, காணி அமைச்சு, விளையாட்டு அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படைகள் கலந்து கொண்டனர்.



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவையும் ஒன்றுசேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளீர்களா?

ஜனாதிபதியுடன் நீங்கள் பேசும்போது தேசிய அரசுப்பற்றியோ அல்லது சஜித்துக்கு பிரதமர் பதவி வழங்குவதுபற்றியோ பேசினீர்களா?

தேசிய அரசு தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?

உங்களது கட்சி அரசுடன் இணையுமா?

13 ஆவது திருத்தச் சட்டத்தில் காணி,பொலிஸ் அதிகாரம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?



ஸஹ்ரான் குழு தோற்றம் பெற்றது முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்துதான் என்று சொல்லப்பட்டமை பொய் என்று நிரூபிக்கப் பட்டுவிட்டது. ஈஸ்டர் தாக்குதல் என்பது அரசியல் தாக்குதல். எமது ஆட்சியின் போது அது நடந்தாலும் பிறகு ஆட்சியைக் கைப்பற்றிய கட்சி உத்தியோகப் பற்றற்ற முறையில் தேர்தல் பிரசாரத்தை முதலாவதாக ஆரம்பித்த அன்றைய தினம்தான் குண்டு வெடித்தது..

# வடக்கு-கிழக்கு பிரிவதை இந்தியா எதிர்க்கும்

இவ்வாறு மனோ கணேசன் எம்பி கூறினார்.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவையும் ஒன்றுசேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளீர்களா?**

பதில் : இப்போது இல்லை.முதலில் ஈடுபட்டேன்.ஐக்கிய தேசிய கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைந்து பாரிய கூட்டணி ஒன்றை உருவாக்கும் திட்டம் என்னிடம் இருந்தது.

ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள சிலரும் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சிலரும் அதை விரும்பினர்.இரு கட்சிகளின் ஆதரவாளர்களும் அதை விரும்பினர்.

பிரதான இரு தலைவர்களும் விரும்பாமல் அதைச் செய்ய முடியாது. ஒரு தலைவர் மாத்திரம் விரும்பினார். அடுத்தவர் விரும்பவில்லை.அதனால் அந்த முயற்சியைக் கைவிட்டேன்.

**கேள்வி : மீண்டும் அந்த முயற்சியைத் தொடரும் எண்ணம் இருக்கா?**

பதில் : அவர்கள் இருவரும் அதை விரும்ப வேண்டும்.இல்லாமல் முயற்சி செய்வதில் பயனில்லை.

**கேள்வி ரணிலுடன் நீங்கள் பேசும்போது தேசிய அரசுப்பற்றியோ அல்லது சஜித்துக்கு பிரதமர் பதவி வழங்குவதுபற்றியோ பேசினீர்களா?**

பதில் : இல்லை.பிரதமர் பதவி வழங்குவதுபற்றி நானும் பேசவில்லைஅவரும் சொல்லவில்லை. முதலில் இணைவதற்கு இணங்க வேண்டும். அதன் பின்தான் பதவி பற்றிப் பேசலாம்.

அதேபோல்,தேசிய அரசு பற்றியும் பேசவில்லை.

**கேள்வி : நீங்கள் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருந்துகொண்டு அடிக்கடி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசி வருகிறீர்களே?**

பதில் : ஆம்..அதில் என்ன பிழை இருக்கிறது.அவரை 20 வருடங்களுக்கு மேலாக எனக்கு தெரியும்.ஐக்கிய தேசிய கட்சி கூட்டணியில் இருந்துள்ளேன்.அவர் நாட்டின் தலைவர் அவருடன் பேசுவதில் என்ன தவறு?

நான் களவில் அவருடன் பேசவில்லை. வெளிப்படையாகவே பேசுகிறேன்.

அடுத்தது நான் அமைச்சுப் பதவிகளுக்காக அவருடன் பேசவில்லை. அப்படி விலை போகக்கூடியவனும் அல்ல நான்.

**கேள்வி : எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஜனாதிபதியைச் சந்தித்தால் மக்கள் சந்தேகத்துடன்தான் பார்ப்பார்கள்.நீங்கள் சந்தித்து என்ன பேசுவீர்கள்?**

பதில் : இப்போதைய அரசியல் நிலைமையின் கீழ் மக்கள் சந்தேகத்துடன் பார்ப்பது நியாயம்.

நாங்கள் ஜனாதிபதியை சந்தித்து பேசியது எமது மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக.குறைந்த வருமானம் பெறுபவர்கள் அவர்கள்தான்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும்போது உண்மையில் நிவாரணத்துக்குத் தகுதியுடையவர் உள்வாங்கப்பட வேண்டும் என்பதுபற்றியே பேசினோம்.

**கேள்வி : தேசிய அரசு தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : தேசிய அரசுப்பற்றி ஜனாதிபதி பேசவில்லை.முழு நாடாளுமன்றமும் அரசுக்காக வேலை செய்ய வேண்டும் என்றுதான் கூறினார்.

அரசுடன் இணைய விரும்புபவர்கள் அவர்களது கட்சியுடன் வந்து சேர முடியும் என்று கூறினார்.அப்படி முடியாதுவிட்டால் தனியே வர முடியும் என்றார்.

அப்படியும் முடியாதுவிட்டால் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே அரசுக்கு வேலை செய்யலாம்.அதற்கான குழுக்களை நிறுவி பொறுப்புக்களை பகிர்ந்து கொடுப்போம் என்றார்.

**கேள்வி : உங்களது கட்சி அரசுடன் இணையுமா?**

பதில் : அப்படி இல்லை.

**கேள்வி : 13 ஆவது திருத்தச் சட்டத்தில் காணி,பொலிஸ் அதிகாரம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : 13 இல் இருக்கின்ற விடயத்தை அப்படியே மாகாண சபைகளுக்கு கொடுப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

சில அதிகாரங்கள் தேவை இல்லை என்று ஏதாவது மாகாண சபைகள் கூறினால் அந்த மாகாண சபைகளுக்கு வழங்காமல் இருக்கலாம்.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் என்பது தனியாக பொலிஸ் பிரிவை உருவாக்கி-தனியான சீருடைகளை வழங்கி-தேசிய பொலிஸ் கட்டமைப்பில் இருந்து தனியாக உருவாக்குவது அல்ல. நாடு பூராகவும் ஒரே பொலிஸ்தான்.

அதிகார பகிர்வு என்பது கொழும்பில் இருக்கக்கூடாது.அது பகிரப்பட்டு கிராமங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கிற்கு மாத்திரம் அல்ல. தெற்கில் உள்ள சிங்கள ஊர்களுக்கும் அதிகாரம் பகிரப்பட வேண்டும்.

தேசிய பிரச்சினையை தீர்ப்பதாக வாக்குறுதி வழங்கி அரசியல்வாதிகள் அதிகாரத்துக்கு வருகிறார்கள்.அப்படி வந்து அவர்கள் பிரச்சினையைத் தீர்த்தது கிடையாது.

**கேள்வி : வடக்கு-கிழக்கை பிரித்துக் கொடுப்பதற்கு இந்தியா விரும்புமா ?**

பதில் : ஒருபோதும் இல்லை.வடக்கு-கிழக்கை பிரித்து தனிநாடாக வழங்குவதற்கு இலங்கை அரசு இணங்கினால்கூட இந்தியா இணங்காது.அப்படி பிரிந்தால் அது இந்தியாவுக்குத்தான் பிரச்சினை.

தமிழ் நாடும் பிரிவதற்கு முற்படும். அதனால் இந்தியா வடக்கு-கிழக்கு தனியாகப் பிரிந்து செல்வதை விரும்பாது.

**கேள்வி : பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : நல்லாட்சியில் இப்படியான ஒன்றைக் கொண்டுவருவதற்கு முயற்சித்தபோது அமைச்சரவையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு அது தடுக்கப்பட்டது.அதை நானும் எதிர்த்தேன்.

இப்போது கொண்டுவரப்படவுள்ள சட்டமூலம் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்கிறது.அவர் நினைத்தால் ஏதாவது நிறுவனம் பாதுகாப்புக்கு எதிராக செயற்படுகிறது என்று சொல்லி அதை மூட முடியும்.

அதேபோல் தனி நபர்களையும் கைது செய்ய முடியும்..

இப்போது பயங்கரவாதம் இல்லை.வடக்கு-கிழக்கிலும் பயங்கரவாதம் இல்லை.இந்த நிலையில் இறுக்கமான சட்டம் தேவை இல்லை.

ஆயுதக் குழுக்கள் அங்கு தோற்றம் பெற முடியாது.மக்கள் எதிர்ப்பார்கள்.

ஸஹ்ரான் குழு தோற்றம் பெற்றது முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்துதான் என்று சொல்லப்பட்டமை பொய் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது.

ஈஸ்டர் தாக்குதல் என்பது அரசியல் தாக்குதல்.

எமது ஆட்சியின்போது அது நடந்தாலும் பிறகு ஆட்சியைக் கைப்பற்றிய கட்சி உத்தியோகப்பற்றற்ற முறையில் தேர்தல் பிரசாரத்தை முதலாவதாக ஆரம்பித்த அன்றைய தினம்தான் குண்டு வெடித்தது.

இதன் அர்த்தத்தை புரிந்துகொள்ளுங்கள்.

ஆகவே,இந்த சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு நாம் விடமாட்டோம்.கடுமையாக எதிர்ப்போம்.

**கேள்வி : அமைச்சுப் பதவி தருவதற்கு உங்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுக்கவில்லையா?**

பதில் : ஜனாதிபதி நாடாளுமன்றில் விடுத்த பொதுவான அழைப்பைவிட தனிப்பட்ட முறையில் எந்த அழைப்பும் இல்லை.இருந்தாலும்,அமைச்சுப் பதவி ஏற்கும் எண்ணம் எனக்கு இல்லை.

ஆட்சியை அமைப்பதாக இருந்தாலும்,அமைச்சுப் பதவிகளை வகிப்பதாக இருந்தாலும் அது அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்தான்.

இப்போது இருப்பது உண்மையான மக்கள் அணையைக் கொண்ட நாடாளுமன்றம் இல்லை.தேர்தலின் பின்தான் உண்மையான மக்கள் ஆணை கொண்ட நாடாளுமன்றம் உருவாகும்.

ஜனாதிபதித் தேர்தல்,உள்ளூராட்சி சபைத் தேர்தல்,மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றுக்கு முன் ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும். என்றார்.

# துப்பறிவாளன்



## ராஜிதவின் சூப்பர் சொட்

ராஜித சேனாரத்ன அரசுடன் இணையப்போகிறார் என்று கூறப்பட்டு வருவதால் அவரை இலக்கு வைத்து ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அவ்வாறான தாக்குதல் ஒன்றை நடத்தினார் .துசார இந்துனில் எம்பி .

“சிலருக்கு வயது போனதும் தலை குழம்பிப் போகிறது.எப்படியாவது அரசுடன் இணைந்தால் போதும் என்று நினைக்கின்றனர்.“““

என்று மறைமுகமாகத் தாக்கினார் துசார.

இதற்கு வைத்திய அடிப்படையிலான பதில் ஒன்றை வழங்க வேண்டும் என்று விரும்பிய ராஜித அப்படியான ஒரு பதிலை தயார் பண்ணி துஸாரவின் வாட்ஸப்புக்கு அனுப்பினார்.

“வைத்திய அடிப்படையில் 50 வயதுக்கும் 80 வயதுக்கும் இடையிலான மூளையே நல்லமுறையில் செயற்படுகிறது “““ என்று அதில் இருந்தது.

அதை வாசித்த துசார ராஜிதவுக்கு எஸ்.எம்.எஸ்,பதில் ஒன்றை அனுப்பினார்.

“நான் அதிகம் யோசித்து அந்தக் கருத்தைக் கூறவில்லை. ஆனால்,நீங்கள் எனக்கு சூப்பர் சொட் ஒன்றைத் தந்துள்ளீர்கள்” என்று அதில் இருந்தது.

## நாமலின் மனைவி ஏசுவாங்களோ?



அரசியல்வாதிகளுடன் செல்பி எடுப்பது இப்போதைய இளைஞர்,யுவதிகளுக்கு பெருமையான விடயம்.கூட்டங்களுக்கு செல்லும்போது அரசியல்வாதிகளை மொய்த்து செல்பிகள் எடுப்பது சாதாரணமாகிவிட்டது.

அண்மையில் நாமல் ராஜபக்சவும் ஒரு கூட்டத்துக்கு சென்றிருந்தார்.

அந்தக் கூட்டம் முடிந்ததும் கூட்டத்துக்கு வந்திருந்த பெண்கள் நாமலுடன் செல்பி எடுப்பதற்கு முண்டியடித்தனர்.

அப்போது ஒரு பெண் நாமலிடம் கேட்டார்.

“சேர்..உங்க மனைவி ஏசுவாங்களோ .தெரியா என ...“ என்றார்.. “ச்சே..ச்சே..அப்படியெல்லாம் கிடையாது“ என்றார் நாமல்.

## ஆளுநர்களுக்கு எதிராக எம்பிக்கள் போர் கொடி



மேல் மாகாண மற்றும் வயம்ப ஆளுநர்களுக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளனர் மொட்டு கட்சி எம்பிக்கள்.

அவர்களுக்கு அரசியல் தெரியாது.அரசியல்வாதிகளை மதிக்கத் தெரியாது. ஆமிக்காரனுகள் போல் நடந்துகொள்கிறார்கள். அவர்களை உடனே விளக்குங்கள் என்று அவர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

அவர்களை நீக்கிவிட்டு ஐக்கிய தேசிய கட்சி ஆட்களையாவது நியமியுங்கள் என்று அவர்கள் ஜனாதிபதியிடம் கெஞ்சிக் கேட்டுள்ளனர்.

ஆனால்,ஜனாதிபதி இதுவரை எந்த பதிலையும் வழங்கவில்லை.

மேல் மாகாண ஆளுநராக இருப்பவர் முன்னாள் விமானப் படைத் தளபதி ரொஷான் குணாதிலக.வயம்ப ஆளுநராக இருப்பவர் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரனாகொட.

இவர்கள் இருவரையும் ஆளுநர்களாக நியமித்தனர் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச என்பது குறிப்பிடத்தக்கது.

## எம்பியின் மனைவியை வழிக்குக் கொண்டுவந்த டிலான்



சுதந்திர மக்கள் சபை அதாவது,டலஸ் எம்பிக்கள் சில நாட்களுக்கு முன் அக்கட்சி எம்பி குணபால ரத்னசேகரவின் வீட்டில் ஒன்று கூடி எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் பற்றிப் பேசினர்.

வசந்த யாப்பா,டிலான் பெரேரா உள்ளிட்ட எம்பிக்கள் பலர் அதில் கலந்துகொண்டனர். கலந்துரையாடலின் முடிவில் குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டார் குணபால எம்பி.

அது என்னவென்றால் அரசியலில் இருந்து ஒதுங்குவதற்கு அவர் எடுத்துள்ள தீர்மானம்தான் அது.

அதை எவரும் எதிர்பார்க்காததால் அதிர்ந்து போயினர்.ஏன் இந்த திடீர் முடிவு என்று விசாரித்தனர் அவர்கள்.

அரசியலில் ஏற்பட்டுள்ள அதிருப்திதான் காரணம் என்றார்.

அதுபோக,அரசியலில் இருந்து ஒதுங்குமாறு அவரது மனைவி அடிக்கடி அழுத்தம் கொடுக்கிறாராம்.

அவசரப்பட வேண்டாம் என்று கூறிய டிலான் நான் உங்கள் மனைவியுடன் பேசி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன் என்றார்.

அவ்வளவுதான்.அந்தப் பெண்ணை ஒரு வழிக்குக் கொண்டுவந்துவிட்டார் டிலான்.

## முட்டை முடிச்சுகளுடன் சென்ற நாமல்



இப்போதெல்லாம் நாமல் ராஜபக்ஸ தீவிர அரசியலில் ஈடுபட்டுத் திரிவதை அவதானிக்க முடிகிறது.அதாவது,மஹிந்தவுக்கு பின் தானே எல்லாவற்றையும் தலைமைதாங்குவதற்கு அவர் முன்நின்று செயற்பட்டு வருகிறார்.

பிரிந்து சென்ற கட்சி ஆதரவாளர்களை மீண்டும் ஒன்றிணைக்கும் வேலையில் இறங்கி இருக்கிறார்.ஆதரவாளர்களின் வீடுகளுக்கும் செல்கிறார்.

அப்படியான சுவாரசியமான சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

தீவிர மஹிந்த ஆதரவாளர் அவர்.அவரது சுவர்கள் முழுவதும் மஹிந்தவின் படங்களையே தொங்கவிட்டிருந்தார்.

அப்படிப்பட்ட தீவிர பக்தனை பொருளாதார பிரச்சினை மாற்றிவிட்டது.

காலிமுகத் திடல் போராட்ட காலத்தில் அவர் சுவர்களில் தொங்கவிடப்பட்டிருந்த மஹிந்தவின் படங்கள் அனைத்தையும் கழற்றி கட்டிலுக்கு கீழே போட்டுவிட்டார்.

அது செய்திகளிலும் வந்தது.இதைப் பார்த்த நாமல் ஓரிரு நாட்களுக்கு முன் அந்த பக்தரின் வீட்டுக்கு முட்டை முடிச்சுகளுடன் சென்று சந்தித்து உரையாடிவிட்டு வந்துள்ளார்.



## குரங்கு வளர்க்கும் எம்பி

கடந்த வாரம் அரச கட்சி எம்பிக்களின் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. அதில் பேசப்பட்ட விடயங்களுள் குரங்குகளை சீனாவுக்கு அனுப்புகிற விடயமும் ஒன்று.

அதற்கு எதிர்ப்பை வெளியிட்டார் ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்பியுமான ஜயந்த வீரசிங்க.

தான் 15 வருடங்களாக குரங்கு ஒன்றை வளர்த்து வருவதாகவும் அதுவால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் கூறினார்.

அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த சக எம்பிக்கள்.

“உங்கள் போன்றவர்களின் வீடுகளில் விலை உயர்ந்த நாய்கள் வளர்ப்பதுபற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம்.இப்பே ாதுதான் முதன் முதலாக குரங்கு வளர்ப்பதை அறிகிறோம்.எங்களது ஊர்களில் எங்களை குரங்குகள் இருக்க விடுவதில்லை. உங்களுக்கு வேண்டுமானால் இன்னும் ஒரு குரங்கு தருகிறோம். வளருங்கள்“ என்றனர் சக எம்பிக்கள்.

“சரி ..சரி. குரங்குகளுக்கு இன்னும் வீசா கிடைக்கவில்லையே..“ என்று கூறி அந்த விவகாரத்தை முடித்து வைத்தார் ஜனாதிபதி.

## பசிலுக்கு இன்னும் தெரியாதாம்



பசில் ராஜபக்ஸவை “““கப்புட்டு காகா“““ என்று மக்கள் கூறுவதை இன்னும் கேட்கவில்லையாம் அவர்.

அப்படி மக்கள் கூறினாலும் கோபப்படமாட்டாராம் அவர். அது அவர்களின் உரிமை என்கிறார் பசில்.

இவ்வளவு பிரபல்யமான நக்கல் இது. இதை கேட்கவில்லை என்பது நம்புகிற மாதிரியா இருக்கு.

# பட்ஜட்டின் பின் ஜனாதிபதித் தேர்தல்

## ரணிலுக்கும் தெய்வத்துக்கும் மட்டுமே அது தெரியும்

சுதந்திர கட்சியின் 14 எம்பிக்களில் 9 பேர் இப்போது இருப்பது அரசுடன். இப்படியான தீர்மானத்துக்கு என்ன காரணம்?

சுதந்திர கட்சி இப்போது நான்கைந்து துண்டுகளாக பிரிந்து கிடக்கின்றனவே?

வயது போன அரசியல்வாதிகள் இளைஞர்களிடம் அரசியலை ஒப்படைக்காமல் இன்னும் பிடித்துக்கொண்டு இருப்பது ஏன் ?

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றி ?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இல்லை.உளூராட்சி சபை உறுப்பினர்கள் இல்லாத நிலையில் நிர்வாகத்தை சரியாகக் கொண்டு செல்லமுடியும்



- இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் சிறிலங்கா சுதந்திர கட்சியின் எம்பி ஷான் விஜயலால். அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது. -

**கேள்வி : சுதந்திர கட்சியின் 14 எம்பிக்களில் 9 பேர் இப்போது இருப்பது அரசுடன்.இப்படியான தீர்மானத்துக்கு என்ன காரணம்?**

பதில் : அரசியலில் மக்களை பற்றி -நாட்டை பற்றி யோசிப்பவர்களும் இருக்கிறார்கள். தங்களின் சுயலாபத்தைப்பற்றி சிந்திப்பவர்களுக்கு உள்ளார்கள். அதுதான் எமது கட்சியிலும் நடந்துள்ளது.

**கேள்வி : சுதந்திர கட்சி இந்தளவு வீழ்ந்து கிடப்பதற்கு என்ன காரணம்?**

பதில் : உண்மையில் இதுபற்றி நாம் கவலையடைகிறோம்.இந்தக் கட்சியை பண்டாரநாயக்க உருவாக்குவதற்கு காரணம் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே.

அவர் ஐக்கிய தேசிய கட்சியில் உள்ளூராட்சி மற்றும் சுகாதார அமைச்சராக இருந்தவர்.அப்போது அந்தக் கட்சிக்குள் மக்களுக்கான வேலைத்திட்டங்கள் எவற்றையும் அவரால் காணமுடியவில்லை.

இதனால் அவர் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகி எதிர்கட்சிக்கு சென்று 1951 செப்டம்பர் 2 ஆம் திகதி சிறிலங்கா சுதந்திர கட்சியை உருவாக்கினார்.

வீழ்ந்து வீழ்ந்து எழும்பி கட்சி இந்த நிலையை அடைந்துள்ளது.இப்போதும் அதே நிலைதான் இந்தக் கட்சிக்கு.

**கேள்வி : சுதந்திர கட்சி இப்போது நான்கைந்து துண்டுகளாக பிரிந்து கிடக்கின்றனவே?**

பதில் : இலங்கையில் பிரச்சினைகள் இல்லாத-பிளவுகள் இல்லாத கட்சிகள் இல்லை.எல்லா கட்சிக்குள்ளும் இந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்கின்றன.

2015 நாடாளுமன்றத் தேர்தலின் பின் கட்சிக்குள் பிளவு ஒன்று ஏற்பட்டது.அதில் இருந்து பலர் மஹிந்த தரப்பால் உருவாக்கப்பட்ட மொட்டு கட்சியுடன் போய் சேர்ந்துகொண்டனர்.

அந்த கட்சி குறுகிய காலத்துக்குள் 3 தேர்தல் வெற்றிகளை பெற்றது.இப்போது அந்த வெற்றி குறுகிய காலத்துக்குள்ளேயே இல்லாமல் போய்விட்டது.

அந்தக் கட்சிக்குள் சரியான கட்டமைப்பு ஒன்று இல்லை. ஆனால்,எமது கட்சியில் பலமான கட்டமைப்பு உள்ளது.அதனால்தான் 70 வருடங்களை தாண்டி பயணித்து வருகிறோம்.

வீழ்ச்சி-உயர்ச்சி என்பது பொதுவான விடயம்.நிலைத்து நிற்றல் என்பதே முக்கியம்.நாம் நிலைத்து நிற்கிறோம்.

ஒருவரால் எமது கட்சியில் இலகுவாக இணையவும் முடியும்விலகவும் முடியும்.

**கேள்வி : சுதந்திர கட்சி மக்களின் தேவையை நிறைவேற்றி இருக்கிறதா?**

பதில் : அண்மை காலத்தில் அதிகாரம் இல்லாமையால் அதைச் செய்ய முடியாமல் போயுள்ளது.இருந்தாலும்,அதிகாரம் கையில் இருந்த காலப்பகுதியில் நாம் மக்களுக்கு நிறையவே செய்துள்ளேன்.

**கேள்வி : 2015 இற்கு பிறகு கட்சிக்கு என்ன நடந்தது?**

பதில் : 2015 இல் மஹிந்த எதிர்ப்பு அலை ஒன்று மக்கள் மத்தியில் ஏற்படுகிறது.அவரைத் தோற்கடிப்பதற்கு பொது வேட்பாளர் ஒருவரின் தேவை ஏற்பட்டது.அந்த அடிப்படையில்தான் மைத்திரி பொதுவேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். வெற்றிபெற்றார். அரசியலில் அவர் ஒரு கொள்கையை வைத்திருந்தார். அவருக்கு ஆதரவு வழங்கியவர்கள் வேறு கொள்கையை வைத்திருந்தனர். இதனால்தான் பிரச்சினைகள்-பிளவுகள் ஏற்பட்டன.

**கேள்வி : வயது போன அரசியல்வாதிகள் இளைஞர்களிடம் அரசியலை ஒப்படைக்காமல் இன்னும் பிடித்துக்கொண்டு இருப்பது ஏன் ?**

பதில் : இலங்கையில் நடுவயதில் உள்ளவர்கள்தான் அரசியலுக்கு வருகிறார்கள்.இளைஞர்கள் மிகக் குறைவு.மக்கள் திரும்ப திரும்ப அவர்களையே தெரிவு செய்வதால் அவர்கள் அரசியலில் தொடர்ந்து இருக்கிறார்கள்.மக்கள் தெரிவு செய்யாவிட்டால் வரமாட்டார்கள்.

இந்த விடயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பது எனது நிலைப்பாடு.

**கேள்வி: பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றி ?**

பதில் : நாம் பயங்கவாதத்தை எதிர்க்கிறோம்.அது எந்த வடிவத்தில் வந்தாலும் ஆதரிக்க முடியாது. ஆனால்,அதன் பெயரில் மக்களை-ஊடகங்களை-தொழில் சங்கங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அதை ஆதரிக்க முடியாது.

**கேள்வி அரசுக்கு ஏன் இந்த சட்டமூலம் அவசரமாகத் தேவைப்படுகிறது.?**

பதில் :அரசின் பொருளாதார நடவடிக்கைக்கு எதிராகவோ அல்லது வேறு ஏதும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகவோ மக்கள் போராட்டங்களை நடத்தினால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே அரசு இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவரப் பார்க்கிறது.

**கேள்வி: உள்ளூராட்சி சபைத் தேர்தல் இல்லை.உளூராட்சி சபை உறுப்பினர்கள் இல்லாத நிலையில் நிர்வாகத்தை சரியாகக் கொண்டு செல்லமுடியுமா?**

பதில் : உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் இல்லாமல் சபைகளை கொண்டு நடத்துவது அர்த்தமற்ற ஒன்று.மக்கள் பிரதிநிதிகள் இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.அனுபவரீதியாகக் கண்டுள்ளோம்.

தேர்தல் நடக்கும் திகதி ரணிலுக்கும் மேலிருக்கும் தெய்வத்துக்கும் மட்டுமே தெரியும்.

**கேள்வி : முதலில் எந்தத் தேர்தல் வரும்?**

பதில் : அரசியலில் நாளை நடக்கப்போவதை சரியாகச் சொல்ல முடியாது.இருந்தாலும்,எதிர்வருகின்ற வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்று மக்கள் நம்புகிறார்கள் என்றார்.



> அரசின் பொருளாதார நடவடிக்கைக்கு எதிராகவோ அல்லது வேறு ஏதும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகவோ மக்கள் போராட்டங்களை நடத்தினால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே அரசு பயங்கரவாதத் தடுப்பு சட்டமூலத்தை அவசரமாகக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது.

# நான்கு வருடங்களின் பின் மகிழ்ச்சியான வெசாக்...

ஈஸ்டர் தாக்குதல்.கொரோனா போன்ற காரணங்களால் தொடர்ச்சியாக கடந்த நான்கு வருடங்களாக மகிழ்ச்சியான வெசாக்கை பௌத்த மக்களால் கொண்டாட முடியாமல் போனது. இந்த முறை அந்த நிலைமையை மாற்றியுள்ளது..
























# ஈராண்டு விளையாட்டு விழா

இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் (PA) ஐக்கிய தென்னிந்திய பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளன விளையாட்டு கழகமும் (UPASI SC) இணைந்து 2023 மார்ச் 23ம் திகதி முதல் 28ம் திகதிவரை ஈராண்டுக்கோர் முறை நடாத்தப்படும் விளையாட்டு விழாவை வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர்.

மூன்று தசாப்தங்களுககும் மேலாக ஈராண்டுக்கோர் முறை நடாத்தப்படும் இவ்விளையாட்டு விழாவில் கிரிக்கட், கோல்ப், (GOLF) டென்னிஸ், பூப்பந்து (டீயனஅiவெழn) மற்றும் பில்லியர்ட்ஸ்/ஸ்னூக்கர் ஆகிய ஐந்து விளையாட்டுகள் உள்ளடங்கியுள்ளள.

UPASI விளையாட்டு கழகத்தின் உயர்மட்ட குழு 2019ல் வருகைதர திட்டமிடப்பட்டிருந்தெனினும் கோவிட் பெருந்தொற்று காரணமாக விதிக்கப்பட்ட பயணத்தடையினால் இவ்விளையாட்டு விழா 2023ம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனவே இவ்விரு சங்கங்களும் மிகவும் எதிர்பார்க்கபட்ட இவ்விளையாட்டு விழாவில் மீண்டும் இணைவதில் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

இலங்கை பெருந்தோட்ட குழு (RPC) கோல்ப் (GOLF) விளையாட்டில் தமது திறமையை வெளிக்காட்டி 20 வருடங்களுக்கு பிறகு விருதை தனதாக்கியது. இவ்விளையாட்டில் தரிந்து விக்ரமசிங்க மிக திறமையாக விளையாடி ஒட்டுமொத்த அணிக்கான விருதை பெற்று தந்ததுடன் 'Stable Ford' விருதையும் வென்றார்.

அத்துடன் இவ்விளையாட்டு விழாவில் இலங்கை பெருந்தோட்ட குழு கிரிக்கட் மற்றும் பூப்பந்து (Badminton) விளையாட்டுகளிலும் வெற்றி பெற்றது.

கிரிக்கட் விளையாட்டின் சிறப்பு அம்சமாக துடுப்பாட்ட வீரர் சத்துர பண்டார தனது மிக சிறந்த துடுப்பாட்டத்தினால் சதம் பெற்றதுடன் "சிறந்த துடுப்பாட்ட வீரர்" ஆட்ட நாயகன் ஆகிய விருதுகளை வென்றார்.

# HNB இன் கெமி புபுதுவ கண்காட்சி

இலங்கையின் கிராமிய நுண்கடன் துறையின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்து பங்களித்து வரும் இலங்கையின் முன்னணி தனியார் வங்கிகளில் ஒன்றான HNB, வருடாந்த HNB Gami Pubuduwa வருடாந்த கண்காட்சியை இந்த வருடம் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.

Gami Pubuduwa வருட Pubuduwa வருடக் கண்காட்சியில் இணைத்துள்ளமை மற்றுமொரு விசேட அம்சமாகும்.

பிரதம அதிதியாக HNBயின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ஜொனதன் அலஸ் மற்றும் CBSL பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் M.S.K. தர்மவர்தன, SMELOC, நிதியமைச்சின் திட்ட



கண்காட்சியில் நாடளாவிய ரீதியில் 130 இற்கும் மேற்பட்ட நுண்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தியதுடன், தமது உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு மேலதிகமாக புதிய சந்தை வாய்ப்புகளையும் பெற்றுக்கொண்டமை சிறப்பம்சமாகும்.

கொவிட்-19 தொற்று நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நுண்நிதி வாடிக்கையாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட 20 மில்லியன் ரூபா நன்கொடையின் கீழ் பயனாளிகளும் தமது உற்பத்திகளை இந்த Gami பணிப்பாளர் வசந்தி விஜேரத்ன மற்றும் HNB நிறைவேற்று பணிப்பாளர்/ பிரதம செயற்பாட்டு அதிகாரி டில்ஷான் ரொட்ரிகோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இது தவிர, HNB பிரதிப் பொது முகாமையாளர் மொத்த வங்கியியல் தமித் பல்லேவத்த, HNB நுண் நிதிப் பிரிவின் தலைவர் வினோத் பெர்னாண்டோ உட்பட HNBயின் சிரேஷ்ட முகாமையாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.




# Courtyard by Marriott இன் டிட்டோஸ்

ஆயசசழைவவ டீழனெழல இன் 30 ஹோட்டல் வர்த்தகநாமங்களின் அசாதாரண போர்ட்ஃபோலியோவின் ஒரு பகுதியான சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஊழரசவலயசன டில ஆயசசழைவவ ஊழடழஅடிழ வின் பிரத்யேக கொஃபி ஷொப் வுவைழ"ள இல் அனைத்து தேநீர் மற்றும் கொஃபி பிரியர்களையும் வரவேற்க தயாராக உள்ளது.

உட்புற மற்றும் வெளிப்புற இருக்கை ஏற்பாடுகளை வழங்கும் ஹோட்டலின் கீழ் மட்டத்தில் வசதியாக அமைந்திருக்கும் டிட்டோஸ், தினமும் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை புதிதாக தயாரிக்கப்படும் கொஃபி மற்றும் நேர்த்தியான தேநீர்களின் இனிமையான நறுமணத்துடன் உங்கள் உணர்வுகளை எழுப்பும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

நட்பான பாரிஸ்டாக்கள் சுவையான தேநீர், கோப்பி பான வகைகள் மற்றும் புதிய பழச்சாறுகளை உருவாக்கும் போது, டிட்டோவின் சமையல் குழு திரைக்குப் பின்னால் புதிதாக பேக் செய்யப்பட்ட பாண், சுவையான கேக்குகள் மற்றும் சுவையான தின்பண்டங்களையும் உருவாக்குகின்றனர்.

வசதியான அலங்காரங்கள், மென்மையான இசை மற்றும் ஏராளமான இயற்கை ஒளியுடன் உங்களை கவர்ந்திழுக்கும் உட்புறம், இன்றைய வேகமான வாழ்க்கை முறையின் தேவைகளிலிருந்து சில மணிநேரங்களை செலவிட விரும்பும் எந்தவொரு நபருக்கும் சிறந்த இடத்தை வழங்குகிறது.




வர்த்தக சுடர்



# செலான் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர

செலான் வங்கியின் புதிய பணிப்பாளர்ஃ பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2023 மே 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் பிரதம நிதி அதிகாரியாக செலான் வங்கியுடன் இணைந்து கொண்டதைத் தொடர்ந்து, 2016 ஆம் ஆண்டில் பிரதம இடர் அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர நியமிக்கப்பட்டதுடன், 2018 முதல் 2019 வரையான காலப்பகுதி வரை கூட்டாண்மை வங்கியியல் செயற்பாடுகளுக்கான பிரதி பொது முகாமையாளராக செயலாற்றியிருந்தார்.

2020 ஜனவரி மாதம் இவருக்கு சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன், அடுத்த ஆண்டில், பிரதம செயற்பாட்டு அதிகாரியாக பதவி உயர்வு பெற்றிருந்தார். 2012 நவம்பர் மாதம் முதல், செலான் டிவலப்மன்ட் பிஎல்சியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் ரமேஷ் திகழ்கின்றார்.

பல வருடங்களாக செலான் வங்கியின் தலைமைத்துவ அணியில் ரமேஷ் அங்கம் வகிப்பதுடன், இந்த புதிய பதவிக்கு அவசியமான பெருமளவு அனுபவங்களையும் அறிவையும் தம்வசம் கொண்டுள்ளார். கடந்த காலங்களில், செலான் வங்கியில் ரமேஷ் பெருமளவு அனுபவங்களைப் பெற்றுள்ளதுடன், வங்கிக்கு தலைமைத்துவமளிப்பதற்கான பெருமளவு திறனையும் தன்வசம் கொண்டுள்ளார். அத்துடன், வங்கியின் தன்னேற்புத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான அர்ப்பணிப்பு, வர்த்தக நாமத்துக்கு வலிமை சேர்ப்பது மற்றும் அதன் எதிர்கால வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு உறுதியான அடித்தளங்களை ஏற்படுத்திக் கொடுப்பது போன்றவற்றில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.




# CDB இற்கு விருது

நிலைபேறான அறிக்கையிடலில் சிறப்பை கௌரவிக்கும் வகையில், சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் /பினான்ஸ் பிஎல்சி (CDB), அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலைபேறான அறிக்கையிடல் விருதுகள் வழங்கும் நிகழ்வில், பெருமைக்குரிய விருதை சுவீகரித்திருந்தது.

இலங்கை பட்டைய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சம்மேளனத்தினால் 19 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த ACCA ஸ்ரீலங்கா நிலைபேறான அறிக்கையிடல் விருதுகள் வழங்கும் நிகழ்வில், நிதிச் சேவைகள் மற்றும் காப்புறுதிப் பிரிவில் இந்த கௌரவிப்பை CDB பெற்றுக் கொண்டது. அதனூடாக வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நம்பிக்கையான செயற்பாடுகளுக்கான தனது அர்ப்பணிப்பு ஆகியன மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களிலும் அடிக்கடி இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் CDB பிரசன்னத்தைக் கொண்டிருந்ததுடன், இந்தப் பிரிவில் இணைந்த வெற்றியாளராகவும், இரண்டாமிடத்தை நான்கு தடவைகளும் வெற்றியீட்டியிருந்தமை அடங்கலாக ஐந்து தடவைகள் வெற்றியீட்டியுள்ளது.

நிலைபேறாண்மைக்கு நிறுவனத்தின் அர்ப்பணிப்பு என்பது மக்கள்.புவி.இலாபம் ஆகிய மூன்று கோட்பாடுகளில் தங்கியுள்ளதுடன், வர்த்தக சம்மேளனத்தினால் சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருதுகள் வழங்கல் நிகழ்வில் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாகவும், சிறந்த பத்து கூட்டாண்மை குடிமகன் விருதுகள் வழங்கலில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.



# நித்தியகல்யாணியின் குடிநீர் திட்டங்கள்

தங்க நகை உலகின் முடிசூடா ராணியாக திகழும் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜ/வலரி கடந்த காலங்களில் முன்னெடுத்த சமூக நலப் பணிகளில் ஒன்றான சுத்தமான குடிநீரை வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அண்மையில் அதன் 15 மற்றும் 16 ஆவது குடிநீர் திட்டம் தலைநகரின் முக்கிய இரண்டு பாடசாலைகளான பம்பலபிட்டிய இந்து கல்லூரி மற்றும் இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன.

அதன் பிரகாரம் மேற்படி இரண்டு பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர் மாணவியர்களுக்கு சுத்தமான, சுகாதாரமான குடிநீரை பருகும் வாய்ப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. தேசத்தின் உயிர்நாடியாக விளங்கும் மாணவ சந்ததியினரின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் தேவை என்பதை நித்தியகல்யாணி ஜ/வலரி எப்பொழுதும் உறுதியாக நம்புகிறது.

"இந்த பாடசாலைகளுக்கு குழாய் நீர் இருந்தாலும் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ளும் தேவை இருந்ததால் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜ/வலரியின் அனுசரணையுடன் மேற்படி இரண்டு பாடசாலைகளுக்கும் இந்த 02 குடிநீர் திட்டங்களையும் அன்பளிப்பு செய்துள்ளோம்.

கடந்த காலங்களில் நாம் பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற பொது இடங்கள் பலவற்றில் இவ்வாறான ஏராளமான குடிநீர் திட்டங்களை செயற்படுத்திய காரணத்தினால் பொதுமக்களுக்கு இலவசமாக சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு உருவானது." என வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரியின் தலைமை நிறைவேற்று அதிகாரி திரு A.ஜெயராஜா தெரிவித்தார்.

இக் குடிநீர் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அதன் 17 ஆவது திட்டமாக மஸ்கெலிய பிரதேசத்தில் நல்லத்தண்ணி மகா வித்தியாலயத்தில் குழாய் கிணறு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. நித்தியகல்யாணி ஜ/வலரி நிறுவனத்தினால் வருடாந்தம் இவ்வாறான பல்வேறு சமூக நலத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதோடு, உலர் உணவுப் பொருள் விநியோகம், கடற்கரை பகுதிகளை சுத்தப்படுத்தல், மரம் நாட்டுதல் – பராமரித்தல் மற்றும் இரத்ததான நிகழ்வு ஆகிய திட்டங்கள் அவற்றில் அடங்கும்.



# 1990 இன் உத்தியோகபூர்வ இணைப்பாளராக டயலொக்

இலங்கையின் முதன்மை இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நாடளாவிய ரீதியில் இலவச முன்–மருத்துவமனை அவசர சிகிச்சை சேவையை வலுவூட்டுவதற்கு உத்தியோகபூர்வ 'இணைப்பு கூட்டாளராக' 1990 சுவ செரிய அவசர சுகப்படுத்தல் (எம்பிலியுலன்ஸ்) சேவைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளது.

1990 சுவ செரிய அறக்கட்டளை அனைத்து இலங்கையர்களுக்கும் அத்தியாவசிய அவசர சிகிச்சையை வழங்கி வருகின்றது, அதற்கமைய நாளொன்றுக்கு 1050+ சிகிச்சைகளை கையாளும் அதே வேளை சராசரியாக 11.40 நிமிடங்கள் பதிலளிக்கும் நேரத்தை செலவிடுவதுடன் மொத்தமாக வருடத்திற்கு 6 மில்லியன் அழைப்புகளுக்கு பதிலளிக்கிறது.

இந்த அர்ப்பணிப்பின் மூலம், 1990 சுவ செரிய அவசரகால சுகப்படுத்தல் சேவைகள் இயங்குதளத்தை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கும், நாடு முழுவதும் தொடர்ச்சியான இணைப்புக் கட்டமைப்பை வழங்குவதற்கும் மற்றும் அவசரநிலைகளுக்கு விரைவான மற்றும் பயனுள்ள பதிலளிப்பை உறுதிசெய்வதன் மூலமும் சுவ செரிய அவசர சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்தலூடாக டயலொக் மேம்படுத்தியுள்ளது.

# முதலிடத்தில் Samsung Soundbar

ஆராய்ச்சி நிறுவனமான FutureSource Consulting படி, ளுயஅளரபெ நுடநஉவசழழெைஉள உலகளாவிய ளுழரனெடியச சந்தையில் முன்னணியில் மதிப்பிடப்பட்டுள்ளது. பெப்ரவரியில் வெளியிடப்பட்ட ஒரு புதிய அறிக்கையின்படி, Samsung 20.2% சந்தைப் பங்கைக் கொண்டு தொடர்ச்சியாக 9வது ஆண்டாக Soundbar சந்தையில் முதலிடத்தில் உள்ளதுடன் 2022 இல் இந்தத் துறையில் 18.4% விற்பனையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் என்றும் காட்டுகிறது.


பிரதான வரிசையில் பிரீமியம் ஞ-ளநசநைள உட்பட ளுயஅளரபெ ளுழரனெடியசள சக்திவாய்ந்தவை மற்றும் தொழில்நுட்ப ரீதியாக உயர்தர ஒலியுடன் மேம்பட்டவை, தொலைக்காட்சிகளுக்கு உகந்தவை மற்றும் நேர்த்தியாகவும்




நவீனமாகவும் இருக்கும். SpaceFit Sound போன்ற அம்சங்கள் அதன் தனித்துவமான ஒலி அனுபவத்திற்காக பாவனையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களால் பாராட்டப்பட்டுள்ளன.

உண்மையில், Samsung Soundbars தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களின் இதயங்களை வென்றுள்ளன. HW-Q990B ஆனது யுஏகுழசரஅள போன்ற விற்பனை நிலையங்களால் 2022 ஆம் ஆண்டின் "Best in Class" வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, HW-S800B ஈர்க்கக்கூடிய ஒலியை வழங்குவதாக விமர்சகர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்த ஆண்டு, Samsung வாடிக்கையாளர் மற்றும் Home Theater ஆர்வலர்களை ஒரே மாதிரியாக ஈர்க்கும் வகையில் மிகவும் அதிவேக சினிமா ஒலியை அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் முதன்மை ஓடியோ அம்சங்களுடன் அதன் Soundbar வரிசையை புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்கிறது.



# INSEE சீமெந்துக்கு SLIM விருது

INSEE சங்ஸ்தா சீமெந்து ஆனது, "ஆண்டின் மக்கள் அபிமானம் பெற்ற வீடமைப்பு மற்றும் கட்டுமான வர்த்தகநாமத்திற்கான" பெருமதிப்பு மிக்க "SLIM Kantar People's Awards 2023" ஐ வென்றுள்ளதன் மூலம், இலங்கையில் மிகவும் அங்கீகாரம் பெற்ற மற்றும் விரும்பப்படும் வர்த்தகநாமமாக தனது ஸ்தானத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. INSEE சங்ஸ்தா சீமெந்து இந்த விருதை தொடர்ந்து 12 வது ஆண்டாகவும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

SLIM Kantar People's Awards MdJ Sri Lanka Institute of Marketing (SLIM) ஆல் ஏற்பாடு செய்யப்படுவதுடன், இது பல்வேறு தொழில் துறைகள் மற்றும் சேவைகளில் நுகர்வோரின் தெரிவுகளை கொண்டாடும் ஒரு தளமாக விளங்குவதால், குறிப்பாக தனித்துவம் வாய்ந்தது.

இந்த விருது வழங்கும் வைபவம் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே இலுள்ள மொனார்க் இம்பீரியலில் இடம்பெற்றதுடன், இதில் வர்த்தகநாமங்கள் மற்றும் முகவர்கள் என இரண்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட சந்தைப்படுத்துனர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

INSEE Cement நிறுவனத்தின் வர்த்தகப் பணிப்பாளரான நந்தன அமுனுதுடுவ நிறுவனம் சார்பாக மக்கள் அபிமான விருதை ஏற்றுக்கொண்டார்.

INSEE சங்ஸ்தா மீது தொடர்ந்து பேணி வருகின்ற நம்பிக்கை மற்றும் மதிப்புக்கு அவர் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.





# இரத்த வங்கிக்கு Brandix உதவி

இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளரான Brandix அப்பரல் லிமிடெட், நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியை மறுசீரமைப்பு செய்து ஒப்படைத்துள்ளது. நாடு முழுவதிலும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதில் குழுமத்தின் தொடர்ச்சியான முயற்சிகளின் அங்கமாக, கட்டுநாயக்கவிலுள்ள Brandix Essentials இனால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தேசிய இரத்த மாற்றீட்டு சேவைகளின் பணிப்பாளர் வைத்தியர்.

லக்ஷ்மன் எதிரிசிங்க இந்தத் திட்டத்தை வரவேற்றிருந்ததுடன், கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு அத்தியாவசியமான காலத்தில் இந்த பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இலங்கையில் தேசிய இரத்த மாற்றீட்டு சேவைக்கான மாபெரும் தனியார் கூட்டாண்மை குருதி பங்களிப்பு வழங்கும் நிறுவனமாக டீசயனெiஒ திகழ்கின்றது.

வைத்தியர் எதிரிசிங்க தெரிவிக்கையில், "தேசத்துக்கு Brandix இடமிருந்து வழங்கப்படும் பெறுமதி வாய்ந்த சேவையாக இது அமைந்துள்ளது.

நீர்கொழும்பிலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதுடன், நாட்டின் பொருளாதார செயற்பாடுகளின் மையமாகத் திகழும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு அளப்பரிய சேவைகளை வழங்குகின்றது.